بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 01/07/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 24**
**திருக்குர்ஆனின் போதனை படி, எல்லா அற்புதங்களும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து இருக்கின்றன. இதில் எந்த மனிதருடைய தலையீடும் ஆதிக்கமும் இருப்பதில்லை.**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில், கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட **போர்ப்படைகளின் தொடர்ச்சியாக ஒன்பதாவது போர்ப்படை பற்றிக் கூறினார்கள்:**

ஹஸ்ரத் அலா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஜாருத் (ரலி) அவர்களுக்கு, 'நீங்கள் அப்துல் கைஸ் கோத்திரத்தை அழைத்துக் கொண்டு, ஹுதமோடு போரிடுவதற்காக, ஹஜருடன் இணைந்துள்ள பகுதிக்குச் சென்று முகாமிடுங்கள்' என்று கட்டளை அனுப்பினார்கள். ஹஸ்ரத் அலா (ரலி) அவர்கள் தமது படையுடன் ஹுதமை எதிர்கொள்ள அந்தப் பகுதிக்கு வந்தார்கள். தாரைன் வாசிகள் தவிர, எல்லா இணைவைப்பாளர்களும் ஹுதமிடம் ஒன்றுதிரண்டு விட்டனர்.

இவ்வாறு, முஸ்லிம்கள் அனைவரும் ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்களிடம் ஒன்றிணைந்து விட்டார்கள். இருவரும் தமக்கு முன்னால் அகழிகளைத் தோண்டிக் கொண்டார்கள். தினமும் அவர்கள் தமது அகழியைத் தாண்டி எதிரி மீது தாக்குதல் தொடுப்பார்கள். போருக்குப் பிறகு, மீண்டும் அகழிக்குப் பின்னால், தள்ளி வந்து விடுவார்கள். ஒரு மாதம் வரை போரின் நிலை இப்படியே இருந்து வந்தது.

இதற்கிடையிலேயே ஓரிரவு முஸ்லிம்களுக்கு எதிரிகளின் தங்குமிடத்திலிருந்து பயங்கரமான கூப்பாடு கேட்டது. ஹஸ்ரத் அலா (ரலி) அவர்கள், 'யாராவது சென்று எதிரியின் அசல் நிலையைப் பற்றி செய்தி அறிந்து வருவாரா?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹஸஃப் (ரலி) அவர்கள் 'நான் இந்தப் பணிக்காக செல்கிறேன்' என்று கூறினார்கள். அவர்கள் திரும்பி வந்து, 'நமது எதிரிகள் போதையில் திளைத்து, போதை மயக்கத்தில் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் இந்தக் கூப்பாடு எல்லாம்' என்று தகவல் கொடுத்தார்கள்.

இதைக் கேட்டதும், முஸ்லிம்கள் உடனடியாக எதிரிகள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். அவர்களது முகாமுக்குள் நுழைந்து தயக்கமின்றி அவர்களை மரணத்தின் குழிக்குள் இறக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் தங்களது அகழிகளின் பக்கம் ஓடிச் சென்று விட்டனர். பலர் அதில் விழுந்து அழிந்தனர். பலர் தப்பி விட்டனர். பலர் பயந்து போயினர். சிலர் கொல்லவோ அல்லது சிறைபிடிக்கவோ பட்டனர். முஸ்லிம்கள் அவர்களது முகாமிலிருந்த எல்லாப் பொருள்களையும்

கைப்பற்றிக் கொண்டார்கள். எந்த நபரால் தப்பி ஓட முடிந்ததோ அவரால் தனது உடலில் இருந்த பொருளை மட்டுமே எடுத்து செல்ல முடிந்தது. ஆயினும், அப்ஜர் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடி விட்டான்.

அச்சம் மற்றும் திகில் காரணமாக, ஹுதமின் நிலை, அவனது உடலில் உயிரே இல்லாதது போன்று இருந்தது. அவன் தனது குதிரையை நோக்கி ஓடினான். அதற்குள் முஸ்லிம்கள் இணைவைப்பாளர்களுக்கு நடுவில் வந்து விட்டிருந்தார்கள். திகிலடைந்த ஹுதமும் முஸ்லிம்களிடமிருந்து தப்பியோடி தனது குதிரையில் ஏறுவதற்காக செல்ல முற்பட்டான். அவன், குதிரையேறும் படித்தட்டில் காலை வைத்ததுமே அது உடைந்து விட்டது. ஹஸ்ரத் கைஸ் பின் ஆஸிம் (ரலி) அவர்கள் அவனை நரகத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

முஷ்ரிக்களின் தங்குமிடத்திலிருந்த எல்லாப் பொருள்களையும் கைப்பற்றிய பிறகு, காலையில் ஹஸ்ரத் அலா (ரலி) அவர்கள் போர்ச் செல்வங்களை போர் வீரர்களுக்குப் பகிர்ந்தளித்து விட்டார்கள். குறிப்பாக போரில் திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கு, மரணித்த தலைவர்களின் விலையுயர்ந்த ஆடைகளையும் வழங்கினார்கள். அவர்களில் ஹஸ்ரத் அஃபீஃப் பின் முன்ஸிர் (ரலி), ஹஸ்ரத் கைஸ் பின் ஆஸிம் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸமாமா பின் உஸால் (ரலி) ஆகியோரும் இருந்தார்கள். ஹஸ்ரத் ஸமாமா அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆடைகளில் ஹுதமுடைய விலையுயர்ந்த, வேலைப்பாடு மிக்க, கருப்பு நிற மேலங்கி ஒன்று இருந்தது. அவன் அதை அணிந்து கொண்டு மிகவும் கர்வத்தோடும் ஆணவத்தோடும் திரிந்து வந்தான். இந்தப் போர்ப்படையின் வெற்றியின் தகவல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குக் கடிதம் மூலமாகத் தெரிவிக்கப்பட்டது.

ஹஜரையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் ஹஸ்ரத் அலா (ரலி) அவர்கள் கைப்பற்றி விட்டார்கள். ஆனால், உள்ளூர் பாரஸீகர்கள் பலர் புதிய அரசாங்கத்துக்கு எதிராக இருந்தனர். பெரும்பாலும் அவர்கள், 'மஃப்ரூக் ஷீபானீ தனது சமுதாயங்களான தஃக்லப் மற்றும் நம்ர் உடைய படைகளை அழைத்துக் கொண்டு வந்து கொண்டிருக்கிறான். ஹஜரில் மதீனாவின் ஆளுமை கவிழும் நேரம் நெருங்குகிறது' என்ற செய்தியைப் பரப்பி மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தி வந்தனர். இந்த விஷயங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்த போது, **ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்:**

'ஷீபான் பின் ஸஃலபா கோத்திரத்தினர் உங்கள் மீது தாக்குதல் தொடுக்க இருக்கின்றனர் என்பதும் தீமையை விரும்பும் விஷமிகள் இந்தச் செய்தியைப் பரப்புகிறார்கள் என்பதும் ஆய்வின் மூலம் உங்களுக்குத் தெரிந்து விட்டால், அவர்களைத் தண்டிப்பதற்காகப் படையை அனுப்புங்கள். அவர்களை நசுக்கி விடுங்கள். அவர்களுக்குப் பின்னால் இருக்கும் கோத்திரங்களை, ஒருபோதும் தலை தூக்க துணிச்சல் இருக்காத அளவுக்கு அச்சுறுத்தி விடுங்கள்.'

முர்தத்கள் (பாரஸீக வளைகுடாவின் தீவான) தாரைனில் ஒன்றிணைந்து விட்டனர். ஹஸ்ரத் அலா (ரலி) அவர்களிடம் தோல்வியைத் தழுவிய பிறகு, தோற்றுப் போன முர்தத்களின் ஒரு பெரும் பகுதி, கப்பல்களில் அமர்ந்து தாரைன் சென்று விட்டது. மற்ற மக்கள் தத்தமது கோத்திரங்களின் பகுதிகளுக்குத் திரும்பி சென்று விட்டார்கள்.

பஹ்ரைனில் குழப்பம் எனும் நெருப்பை அணைப்பதில் முஸன்னா பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் பங்களிப்பு அதிகம் இருந்தது. அவர்கள் தமது படையுடன் ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்களுக்கு ஒத்துழைப்பு

நல்கினார்கள். பஹ்ரைனிலிருந்து வடக்கை நோக்கிப் பயணமானார்கள். கதீஃப் மற்றும் ஹஜரைக் கைப்பற்றினார்கள். தமது இந்த மிஷனிலேயே ஈடுபட்டிருந்தார்கள். எதுவரை என்றால், பஹ்ரைனின் முர்தத்களுக்கு உதவி புரிந்த பாரஸீக படைகளையும் அவற்றின் அதிகாரிளையும் வெற்றி கண்டார்கள்.

ஹஸ்ரத் அலா (ரலி) அவர்கள் இணைவைப்பாளர்களின் படைகளிடத்திலேயே தங்கியிருக்கையில், அவர்கள் பக்ர் பின் வாயில் கோத்திரத்திற்கு எழுதிய கடிதங்களுக்கு பதில் வந்தது. அதில் அவர்கள் எண்ணியது போன்றே செய்தி கிடைத்தது. அதாவது, 'அந்த மக்கள் முஸ்லிம்கள் ஆவார்கள். கிளர்ச்சி செய்யவில்லை. போர் புரிய மாட்டார்கள்.'

மேலும், அவர்கள் அனைவரும் சென்ற பிறகு, பின்னால் பஹ்ரைன் வாசிகளில் யாருக்கும் துன்பம் ஏற்படும் எந்த சம்பவமும் நிகழாது என்று அவர்களுக்கு உறுதியான பிறகு, அவர்கள் எல்லா முஸ்லிம்களும் தாரைனை நோக்கி செல்லுமாறும் முதலில் முன்னோக்கி அடியெடுத்து வைக்குமாறும் அழைப்பு விடுத்தார்கள்.

முஸ்லிம்களிடம், அவர்கள் பயணம் செய்து தீவு வரை செல்வதற்குக் கப்பல்கள் ஏதும் இருக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதைப் பார்த்து ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மக்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு முன்பு சொற்பொழிவு ஆற்றியவாறு கூறினார்கள்: 'அல்லாஹ் உங்களுக்காகக் கிளர்ச்சியாளர்களின் கூட்டங்களை ஒன்று திரட்டி, போரைக் கடலுக்குள் தள்ளி விட்டான். அவன் முதலில் உங்களுக்கு தனது அடையாளங்களை, அந்த அடையாளங்கள் மூலமாக நீங்கள் கடலிலும் பாடம் கற்கும் பொருட்டு, நிலத்தில் காட்டியுள்ளான். உங்களது எதிரிகளை நோக்கிச் செல்லுங்கள். கடலைக் கிழித்தவாறு அவர்கள் பக்கம் முன்னேறுங்கள். ஏனெனில், அல்லாஹ் உங்களுக்காக அவர்களை ஒன்று திரட்டியுள்ளான்.'

அவர்கள் அனைவரும் இவ்வாறு பதில் அளித்தார்கள்: 'இறைவன் மீது ஆணையாக! நாங்கள் அவ்வாறே செய்வோம். தஹ்னாவில் அற்புதத்தைக் கண்ட பிறகு, நாங்கள் உயிருடன் இருக்கும் வரை இவர்களைக் கண்டு அஞ்ச மாட்டோம்.'

அல்லாஹ்வின் வல்லமை! ஹஸ்ரத் அலா (ரலி) அவர்களும் எல்லா முஸ்லிம்களும் அந்த இடத்திலிருந்து நடந்து கடலின் கரைக்கு வந்தார்கள். மேலும், இறைவனின் முன்னிலையில் இவ்வாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள்:

يَا اَرْحَمَ الرّٰحِمِيْنَ يَا كَرِيْمُ يَا حَلِيْمُ يَا اَحَدُ يَا صَمَدُ يَا حَیُّ يَا مُحْیِ الْمَوْتِ يَا حَیُّ يَا قَيُّوْمُ لَآ اِلٰهَ اِلَّا اَنْتَ يَا رَبَّنَا

அன்னார் அனைவரிடமும் இந்த துஆவை செய்தவாறு கடலில் தமது பயண விலங்குகளை செலுத்துமாறு கூறினார்கள். எல்லாரும் இவ்வாறே செய்தார்கள். மேலும், எவ்வித இழப்பும் இன்றி அந்த வளைகுடாவைக் கடந்து விட்டார்கள்.

*ஹுஸைர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* தாரைன் சென்றடைந்ததும் இரு தரப்பினருக்கும் இடையில் மிகவும் பயங்ரமான போர் நடைபெற்றது. எல்லாக் கிளர்ச்சியாளர்களும் கொல்லப்பட்டனர். செய்தி தெரிவிப்பவர் கூட எவரும் மிஞ்சவில்லை. முஸ்லிம்கள் அவர்களின் குடும்பத்தாரை அடிமைகளாக ஆக்கிக் கொண்டார்கள். சொத்துக்களைக் கைப்பற்றி விட்டார்கள். ஒவ்வொரு குதிரை வீரருக்கும் ஆறாயிரம் திர்ஹம்களும், ஒவ்வொரு சிப்பாய்க்கும் ஈராயிரம் திர்ஹம்ளும் என்ற வீதமாகப் போர்ச் செல்வங்கள் கிடைத்தன.

**பத்தாவது போர்ப்படை, ஏமனின் திஹாமாவைச் சேர்ந்த கிளர்ச்சி செய்த முர்தத்களுக்கு எதிராக ஹஸ்ரத் ஸுவைத் பின் முக்ரின் (ரலி) அவர்கள் தலைமையில் அனுப்பப்பட்டது.** ஹஸ்ரத் ஸுவைத் பின் முக்ரின் முஸனீ அவர்கள்

ஹிஜ்ரீ 5 ஆம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். திஹாமா வாசிகள் முர்தத் ஆன மற்றும் கிளர்ச்சி செய்த சூழலையும் சம்பவங்களையும் எடுத்துரைத்த வண்ணம் ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்:

**இங்கு முர்தத் ஆகும் விஷயத்தை வேரறுப்பதில் முதலிடத்தில் தாஹிர் பின் அபீ ஹாலா (ரலி) அவர்கள் இருந்தார்கள்.** அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து திஹாமாவின் பகுதியில் ஆளுநராக இருந்தார்கள். பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (ஹிஸ்ர் மௌத் உடைய பகுதிகளான) ஸகாஸக் மற்றும் ஸகூனில் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டிருந்த உக்காஷா பின் ஸவ்ர் (ரலி) அவர்களுக்குத் திஹாமாவில் தங்குமாறும் அதில் வசிப்பவர்களைத் தம்மிடம் ஒன்று திரட்டி ஆணைக்காகக் காத்திருக்குமாறும் கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் 'பஜீலா' கோத்திரத்திடம் ஜரீர் பின் அப்தில்லாஹ் பஜலீ (ரலி) அவர்களைத் திருப்பி அனுப்பினார்கள். மேலும், அவர்களுக்குத் தமது சமுதாயத்தில் உறுதியாக நிலை நிற்கும் முஸ்லிம்களை உடன் அழைத்துக் கொண்டு இஸ்லாத்தை விட்டும் முர்தத் ஆகி விட்டவர்களோடு போர் புரியுமாறும், அதற்குப் பிறகு, 'கஸ்அம்' கோத்திரத்தைச் சென்றடைந்து அவர்களில் முர்தத் ஆனவர்களோடு போர் புரியுமாறும் கட்டளையிட்டார்கள். ஜரீர் (ரலி) அவர்கள் தமது பணிக்காகப் புறப்பட்டார்கள். சித்தீக்கே அக்பர் (ரலி) அவர்களின் கட்டளையை நிறைவேற்றினார்கள். சில மக்களைத் தவிர எவரும் அவர்களை எதிர் கொள்ள முன்வரவில்லை. அன்னார் அவர்களைக் கொன்று, சிதறடித்து விட்டார்கள்.

குத்பா சானியாவுக்கு முன், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பயங்கரவாத சம்பவத்தில் **ஷஹீத் ஆன இரண்டு காதிம்கள்,** புர்கீனா ஃபாஸோவின் டோரீ மண்டலத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய டேக்கூ ஸகரிய்யா சாஹிப் அவர்கள் மற்றும் மதிப்பிற்குரிய டேக்கூ மூஸா சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்.

இதே போன்று, மூன்று மர்ஹூம்கள், சிந்துடைய உமர் கோட் மாவட்டத்தின் ஊரான சாதிக்பூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் யூஸுஃப் சாஹிப் பலோச்சீ அவர்கள், ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய வாகிஃபா நவ், முபாரிஸா ஃபாரூக் சாஹிபா அவர்கள் மற்றும் ஐவரி கோஸ்ட்டைச் சேர்ந்த இயக்கத்தின் முஅல்லிம் மதிப்பிற்குரிய அன்ஸுமானஹ் பதாரா சாஹிப் அவர்கள் ஆகியோரைப் பற்றியும் மிகவும் விளக்கமாக அவர்களது நற்குறிப்புகளை எடுத்துரைத்தார்கள்.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, இவர்கள் அனைவரின் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பதாகக் கூறினார்கள்.

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَن یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہِ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)